சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.NO. **586 / 2019**

மனுதாரர் / எதிர்மனுதாரர் **ம.சா.2**வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திருமதி.A.அம்சவள்ளி அவர்களால் 44/1969 பிரிவின்படி 04.11.2025 ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | சரவணக்குமார் | கிராமம் : | |
| த/பெ : | | வட்டம் : | |
| மதம் : | | தொழில்: | |
| ஜாதி : | | வயது : | |

முதல் விசாரணை

நான் இந்த மனுவின் சாட்சி ஆவேன். எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். என்னுடைய ஆதார் அட்டையின் ஜெராக்ஸ் நகல் - ம.சா.ஆ.5. (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது)

இரண்டாவது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க சம்மன் எதுவும் வரவில்லை. மனுதாரர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்துபோனவர்கள் எனக்கு தெரிந்தவர்கள். விபத்து நடந்த சாலையானது தென்வடல் சாலையாகும். நான் தென்வடல் சாலையில் கிழக்கு புறமாக நின்றுக்கொண்டிருந்தேன். மேற்படி விபத்தில் இறந்தவர் தென்வடல் சாலையில் வடக்கில் இருந்து தெற்காக சாலையில் வந்துக்கொண்டிருந்தார். இருசக்கர வாகனம் எனக்கு முன்பாக 15 அடி தூரத்தில் வந்துக்கொண்டிருந்தது. மேற்படி இருசக்கர வாகனத்திற்கும் போலிரோ வாகனத்திற்கும் சுமார் 10 அடி தூரம் இருக்கும். மேற்படி இருசக்கர வாகனம் போலிரோ வாகனத்தின் வலது பின்புறத்தில் மோதியது. இருசக்கர வாகனத்தின் எந்த பகுதி போலிரோ வாகனத்தின் எந்த பகுதியில் மோதியது என்றால் இருசக்கர வாகனத்தின் முன்பகுதி இடது பம்மர் கால் வைக்கும் பகுதியில் மோதியது. மோதியதை சத்தம் கேட்டுதான் பார்த்தேன் என்றால் இல்லை நேரில் பார்த்தேன். பொதுவாக ஒரு பெரிய வாகனம் நின்றுக்கொண்டிருக்கும்போது அதற்கு பின்புறத்தில் சிறிய வாகனம் நின்றுக்கொண்டிருந்தால் அதனை பார்க்க இயலாது என்றால் சரியல்ல. நான் காவல் துறையில் புகார் கொடுக்கவில்லை. நான் இறந்தவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்று கையெழுத்து எதுவும் போடவில்லை. விபத்து இரவு 7.30 மணிக்கு நடைபெற்றது.

மேற்படி விபத்து நடந்த சாலையில் இரவு நேரம் என்பதால் மின்விளக்கு இல்லை என்று சொன்னால் சரியல்ல, உள்ளது. நான் மேற்படி விபத்தை பார்க்கவில்லை என்றாலும், மனுதாரர்கள் எனக்கு வேண்டியவர்கள் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2025.11.04 18:32:59 +0530

சார்பு நீதிபதி
குளித்தலை.